www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 2nd Term Examination - 2022

**கிறிஸ்தவ நாகரிகம்**
**Christian Civilization**

**Three Hours** | **Gr -12 (2023)** | **49** | **T** | **I,II**

## பகுதி – I

❖ **மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

01. "மனிதன் தன் உடல், உள இயல்புகளை, திறமைகளைப் பயன்படுத்தி, வளப்படுத்தி, வளர்ச்சியுறச் செய்ய எடுக்கும் அனைத்து முயற்சிகளும் பண்பாடு ஆகும்" இக் கூற்றுடன் தொடர்புடைய சங்கம்.
   1) ஜெருசலேம் சங்கம் 2) எபேசு சங்கம் 3) 2ம் வத்திக்கான் சங்கம்
   4) தெனத்திரீம் சங்கம் 5) கல்சடோன் சங்கம்

02. பபிலோனியாவில் இஸ்ரயேல் மக்கள் அடிமைகளாக வாழ்ந்த காலப் பகுதி.
   1) 70 ஆண்டுகள் 2) 100 ஆண்டுகள் 3) 200 ஆண்டுகள்
   4) 450 ஆண்டுகள் 5) 40 ஆண்டுகள்

03.
   A. பிறர்க்கென உழைக்கும் மனப்போக்குடையவராவர்.
   B. இல்வுலகில் நாம் காண்பவை எல்லாம் உண்மை உலகின் சாயல்களே.
   C. கருணை கொண்டவராகவும் இருப்பர்.
   D. மனித ஆன்மா இவ்வுலகைச் சார்ந்ததல்ல.
   மேற்படி கூற்றுக்களில் ஸ்தொயிக்க சிந்தனைக்கு பொருத்தமானது.
   1) A,B 2) B,C 3) B,D 4) C,D 5) A,C

04. தொழுநோயாளர் சீமோன் வீட்டில் இயேசு உணவருந்தும் போது, அவரது காலடிகளை பாவிப் பெண்ணொருவர் நறுமணத்தைலத்தால் பூசிய நிகழ்வு நடந்தேறிய இடம்.
   1) ஒலிவமலை 2) எரிக்கோ 3) எருசலேம் 4) பெத்தானியா 5) எப்ரோன்

05. இஸ்ரயேல் மக்களை வழிநடத்தி, வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்துச் சென்றவர்.
   1) சிம்சோன் 2) தெபோரா 3) யோசுவா 4) ஒத்னியேல் 5) இப்தா

06. பரிசேயர், சதுசேயர் போன்ற சமயப்பிரிவினர் தோற்றம் பெற்ற காலப்பகுதி.
   1) கி.மு 100 2) கி.மு 200 3) கி.மு 600 4) கி.மு 700 5) கி.மு 900

07. இஸ்ரயேலின் பன்னிரு கோத்திரங்களில் கோவிலில் குருத்துவப் பணியாற்றும் பொறுப்பை பெற்றுக் கொண்ட கோத்திரத்தார்.
   1) ரூபன் கோத்திரம் 2) தான் கோத்திரம் 3) யூதா கோத்திரம்
   4) பெஞ்சமின் கோத்திரம் 5) லேவியர் கோத்திரம்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

A- குருகுலத்தவர்களும், சிறுவியாபாரிகளும், கட்டிடக் கலைஞர்களும் அடங்குவர்.
B- ஓராண்டுக்குள் யூதனாக மாறாத புறவினத்தார்
C- நாட்டுப்புற மக்கள் என்பது இதன் பொருளாகும்
D- தண்ணீர் கலக்காத உயர் திராட்சை இரசம் கண்ணாடிக் குவளைகளில் பரிமாறப்படும்.
E- சந்தையினுள்ள பொருள்கள் போல இவர்களும் கருதப்பட்டனர்.

08. மேற்படி கூற்றுக்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினுள் அடங்கும் அடிமைகளைக் குறிப்பவை
1) AB 2) BC 3) BE 4) AD 5) CE

09. அசீரிய அரசர் எத்கிளார் பலசார் இஸ்ரயேலரை நாடுகடத்தி அவ் வெற்றிடத்தில் பிற இனத்தவர்களைக் குடியமர்த்திய காலப்பகுதி.
1) கி.மு 722 2) கி.மு 63 3) கி.மு 922 4) கி.மு 20 5) கி.மு 100

10. “ஏல்பெரித்” என்ற சொல் குறிப்பது.
1) விண்ணில் உள்ள இறைவன்
2) உன்னதரான இறைவன்
3) மாட்சியில் உள்ளவர்
4) உடன்படிக்கையின் இறைவன்
5) என் ஆண்டவர்

11. தொழுகைக் கூடம் பற்றிய சரியான கூற்று யாது?
1) தாவீது மன்னரின் ஆட்சிக்காலத்தில் எருசலேம் தலைநகராக்கப்பட்டது.
2) கி.மு 19 இல் யூதேயா மன்னனான பெரிய ஏரோது மிகப் பிரமாண்டமான அமைப்பில் இதனை புனரமைத்தார்.
3) இங்கு யூதர்கள் ஒன்று கூடி வந்து செபித்தும், இறைவார்த்தைகளை வாசித்தும், அதன் விளக்கங்களைக் காட்டும் வந்தனர்.
4) சாட்சியங்கள் இரண்டும் ஒரே மாதிரி அமைந்திருந்தாலேயே தண்டிக்கப்படலாம்.
5) மரண தண்டனைத் தீர்ப்பாயின் இரு நாட்களின் பின்னரே அது நிறைவேற்றப்பட வேண்டும்.

12. கீழ்வரும் கூற்றுக்களுள் பரிசேயருக்கு பொருத்தமானது.
1) தோராவின் தண்டனைச் சட்டங்களை மிகக் கடுமையாக செயற்படுத்தினர்.
2) இவர்களது மதக் கொள்கை மோசே அளித்த சட்டங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
3) இயேசுவிடம் கேள்விகள் கேட்டு அவரது அறிவைச் சோதித்தனர்.
4) இவர்களது வாழ்க்கை கூட்டு வாழ்க்கை முறையாக அமைந்திருந்தது.
5) பேரரசை நேரடியாக எதிர்க்க முடியாமல் மலைப்பகுதிகளில் மறைந்திருந்து உரோமப் படைகளைத் தாக்கி வந்தனர்.

13. இறைவனின் பாரபட்சமற்ற அன்பும், நன்மைத்தனமும் அனைவருக்கும் உரியதாகும் என்பதனை உணர்த்தும் உவமை.
1) முத்து 2) புதையல் 3) கடுகு விதை
4) வலை 5) புளிப்பு மாவு

14. இறையாட்சியின் முழுமையும், மாட்சியும் எப்புதுமையின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது.
1) தீய ஆவிகளை விரட்டும் புதுமை
2) குணமளிக்கும் புதுமை
3) இயற்கை தொடர்பான புதுமை
4) ஐயாயிரம் பேருக்கு உணவு அளிக்கும் புதுமை
5) இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் புதுமை

15. இயேசுவின் தலைமைத்துவம் தாழ்மையான பணித்தலைமைத்துவம் என்பதற்கு அடையாளமாக அமைவது.
1) வரிதண்டுவோரை அழைத்தல்
2) ஆயக்காரர், விபச்சாரிகள் மீது பரிவிரக்கம் கொண்டிருத்தல்.
3) சமாரியப் பெண் ஒருவருடன் உரையாடியது.
4) சீடர்களின் பாதம் கழுவுதல்
5) பகைவர்களை மன்னித்தல்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

- **16 – 20 வரையான வினாக்களுக்கு கீழ்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி விடையளிக்குக.**

| | | | | |
|---|---|---|---|---|
| **A**<br>தந்தையே முழு அதிகாரத்தையும் கொண்டிருந்தார். | **B**<br>சுக்கோத் | **C**<br>கெற்றுபா | **D**<br>யோம்கிப்பூர் | **E**<br>புதுப்பித்தல் தொடங்குதல். |
| **F**<br>போக்கு ஆடு | **G**<br>குழந்தைக்கு பெயர் சூட்டுதல் | **H**<br>திஸ்ரி<br>(புரட்டாதி – ஐப்பசி) | **I**<br>கிஸ்லு<br>(டிசெம்பர் - 25) | **J**<br>மோகர் |

16. யூத சமூக மரபுகளில் குடும்பத் தலைமைத்துவத்துடன் தொடர்புடைய சோடி.
    1) AG 2) AH 3) CG 4) BH 5) ACG

17. யூத சமூக மரபுகளில் திருமனை ஒப்பந்தத்துடன் தொடர்புடைய சோடி.
    1) AF 2) BG 3) CJ 4) EJ 5) CG

18. பாவக்கழுவாய் விழாவுடன் தொடர்புடைய கூற்றுக்களைக் கொண்ட சோடி எழுத்துக்கள்.
    1) CF 2) DH 3) BDF 4) DF 5) CG

19. ஆலய அர்ப்பண விழாவுடன் தொடர்புடைய எழுத்துக்களை குறிக்கும் சோடி
    1) EH 2) EI 3) EF 4) DI 5) BE

20. கூடாரத் திருவிழாவுடன் தொடர்புடைய கூற்றுக்களை குறிக்கும் எழுத்துச் சோடி
    1) BI 2) HD 3) HI 4) BG 5) BH

(20x1=20 புள்ளிகள்)

## பகுதி II

❖ **பகுதி (அ) இல் இரண்டு வினாக்களையும் பகுதி (ஆ) இல் இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக**

## பகுதி “அ”

01. 1) பண்பாட்டின் தோற்றப்பாடுகள் நான்கு தருக. (2 புள்ளிகள்)
    2) யூத நாகரிகத்தில் செல்வாக்குச் செலுத்திய மொசபத்தேமிய நாகரிகத்தின் கூறுகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)
    3) யூத நாகரிகத்தினுடைய சிறப்பம்சங்கள் கிறிஸ்தவ நாகரிகத்தில் ஏற்படுத்திய தாக்கம் பற்றி விளக்குக. (6 புள்ளிகள்)
    4) எகிப்திய நாகரிகத்தின் சிறப்பம்சங்களைக் கூறி விளக்குக. (8 புள்ளிகள்)

02. 1) யூதர்களின் வழிபாட்டில் கடைப்பிடிக்கப்பட்ட பலிகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
    2) இயேசுவின் மலைப்பொரிவு அறிவுரையில் அடங்கும் விடயங்கள் நான்கினைத் தருக. (4 புள்ளிகள்)
    3) சாலமோனின் ஆட்சிச் சிறப்புக்கள் மூன்றினைக் கூறி விளக்குக. (6 புள்ளிகள்)
    4) யூதர்களின் முக்கிய விழாக்களைக் குறிப்பிட்டு அவற்றுள் ஏதாவது இரண்டினை விளக்குக. (8 புள்ளிகள்)

03. 1) பெரிய ஏரோதுவின் புதல்வர்கள் மூவரின் பெயர்களையும் தருக. (2 புள்ளிகள்)
    2) இயேசுவின் காலத்தில் பொருளாதார வெறுமை உடையவர்களாகக் கருதப்பட்ட சமூகப் பிரிவினர்கள் நால்வரைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
    3) இறையாட்சி பற்றிக் கூறும், உவமைகளை கூறி இரண்டினை விளக்குக. (6 புள்ளிகள்)
    4) யூத சமயக் குழுக்களைக் கூறி இருவரை விளக்குக. (8 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி "ஆ"

04. அ) யூதர்கள் பல நாகரிகங்களின் செல்வாக்கிற்கு உட்பட்டே கடந்து வந்தனர் என்பதை விளக்குக. *(10 புள்ளிகள்)*

ஆ) இன்றைய நவீன உலகிலே மானிட வாழ்வில் கிறிஸ்தவ நாகரிகத்தின் பங்களிப்புப் பற்றிய உமது கருத்துக்களை முன்வைக்குக. *(10 புள்ளிகள்)*

05. அ) இயேசுவின் இறையாட்சியின் அடையாளமாக புதுமை விளங்குகின்றது அவ்வாறான புதுமைகளை வகைப்படுத்தி விளக்குக. *(10 புள்ளிகள்)*

ஆ) இன்றைய சமூகத்தில் இறைவனுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் அருகிவருவதற்கான காரணங்களைக் கூறி விளக்குக. *(10 புள்ளிகள்)*

06. அ) யூத சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களுடன் தம்மை ஒன்றுபடுத்திய ஒருவராக இயேசு வாழ்ந்தார். அவ்வாறு ஒதுக்கப்பட்டவர்களாக கருதப்பட்டவர்களை கூறி விளக்குக. *(10 புள்ளிகள்)*

ஆ) இயேசு ஒதுக்கப்பட்டவரையும் பாவிகளையும் அன்பு செய்தது போல, இன்று நீர் வாழும் சமூகத்தில் காணப்படுகின்ற ஏற்றுத் தாழ்வுகள் மத்தியில் எவ்வாறு செயற்படுவீரென விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

07. அ) குலமுதுவரான ஆபிரகாம் விசுவாசத்திற்குச் சான்று பகர்ந்தார். என்பதற்கான ஆதாரங்களை விளக்குக. *(10 புள்ளிகள்)*

ஆ) பாடசாலை வாழ்வில் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்கும் நீர், அவற்றை எவ்வாறான வழிமுறைகள் ஊடாக செயற்படுத்துவீர் என்பதை விளக்குக. *(10 புள்ளிகள்)*

agaram.lk



agaram.lk